# Medical Financial Assistance பாலிசி சுருக்கம்

Kaiser Permanente, நோயாளிகளின் பராமரிப்புக்காக பணம் செலுத்த உதவும் ஒரு Medical Financial Assistance (MFA) திட்டத்தைக் கொண்டுள்ளது. மருந்துகள் உட்பட, தேவையான பராமரிப்புக்கான உங்கள் செலவுகள் அனைத்தையும் அல்லது ஒரு பகுதியை Kaiser Permanente வழங்கும் இது ஈடு செய்யலாம். உதவி பெறுவது கீழே விவரிக்கப்பட்டுள்ளபடி நிதித் தேவையைப் பொறுத்ததாகும்.

**தகுதியானவர் யார்?**

நீங்கள் குறைந்த வருமானம் உடையவராகவோ, காப்பீடு செய்யப்படாதவராகவோ அல்லது குறைவாகக் காப்பீடு செய்யப்பட்டவராகவோ இருந்தால் நீங்கள் தகுதியுடையவராக இருக்கலாம். பொதுவாக, பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வீர்களாயின், நீங்கள் நிதி உதவிக்கு தகுதியுடையவராவீர்கள்:

- உங்கள் குடும்ப வருமானம் கூட்டாட்சி வறுமை வழிகாட்டுதல்களின் 300% ஆக அல்லது அதற்கும் குறைவாக இருந்தால்
- அல்லது உங்கள் வருமானத்துடன் ஒப்பிடும்போது மருத்துவச் செலவுகள் மிக அதிகமாக இருந்தால்

**இந்தத் திட்டம் எதற்குப் பணம் செலுத்தும்?**

Kaiser Permanente வழங்கும் தேவையான பராமரிப்புக்குப் பணம் செலுத்த MFA திட்டம் உங்களுக்கு உதவும். இதில் அவசர மற்றும் உடனடிச் சிகிச்சை மற்றும் மருந்தகச் சேவைகள் அடங்கும். இத்திட்டம் முழு பில்லையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஈடுசெய்யும்.

இத்திட்டம் பின்வருவனவற்றுக்குப் பணம் செலுத்தாது:

- மருத்துவப் போக்குவரத்து
- சுகாதாரப் பராமரிப்புப் பிரீமியங்கள்
- ஒப்பனை அறுவை சிகிச்சை, கருவுறாமைப் பராமரிப்பு அல்லது வாடகைத் தாய் தொடர்பான செலவுகள்
- Kaiser Permanente க்கு வெளியே வழங்கப்படும் சுகாதாரப் பராமரிப்பு
- மருத்துவ ரீதியாக அவசியமற்றதாக இருந்தது என்று Kaiser Permanente ஆல் தீர்மானிக்கப்படும் பராமரிப்பு

முழுமையான பட்டியலை அறிய, MFA பாலிசி பத்திரத்தை kp.org/mfa இல் படியுங்கள்.

**நான் எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும்?**

நீங்கள் ஆன்லைனில், அஞ்சலில், ஃபேக்ஸ் மூலம் அல்லது நேரடியாக வருகை தந்து விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பதற்கான விரைவான வழி kp.org/mfa க்குச் சென்று, எங்கள் பாதுகாப்பான ஆன்லைன் விண்ணப்பத்திற்கான இணைப்பைப் பெற பதிவு செய்வதாகும். உங்கள்

தகுதியைத் தீர்மானிக்க ஆன்லைன் விண்ணப்பமானது தொடர் கேள்விகளைக் கேட்கும்.

நீங்கள் kp.org/mfa இல் ஒரு வெற்று விண்ணப்பத்தையும் பெறலாம்.

சேர்க்கை அல்லது பில்லிங் செயல்முறையின் எந்தக் கட்டத்திலும் நீங்கள் விண்ணப்பிக்கலாம். உதவி கேட்க நீங்கள் ஒரு பில் வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை.

சில சமயங்களில், நீங்கள் விண்ணப்பிக்காமலேயே உங்கள் பராமரிப்புக்குக் கட்டணம் செலுத்துவதற்கு MFA திட்டம் உதவக்கூடும்.

நீங்கள் உதவி பெறத் தகுதியுடையவராக இருந்தால், பராமரிப்புக்காகப் பொதுவாக பில் செய்யப்படும் (AGB) தொகையை விட அதிகமாக நாங்கள் உங்களுக்கு விதிக்க மாட்டோம். AGB பற்றிய மேலும் தகவல்களுக்கு kp.org/mfa ஐப் பார்க்கவும்.

**நான் விண்ணப்பிப்பதற்கு என்ன தகவல்கள் தேவை?**
நீங்கள் விண்ணப்பிக்கும் போது உங்களிடம் பின்வரும் தகவல்கள் கேட்கப்படும்:

- குடும்பத்தின் அளவு மற்றும் குடும்பத்திலுள்ள அனைத்து பெரியவர்களினதும் வருமானம் பற்றிய தகவல்கள்
- சுகாதாரச் செலவுகள், தெரிந்திருந்தால்
- வருமானத்திற்கான சான்று

வருமானச் சான்றை வழங்குவது, நீங்கள் தகுதியுள்ளவரா என்பதைத் தீர்மானிக்க உதவும்.

**எனது விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதா என்பதை நான் எப்போது அறிவேன்?**
உங்கள் விண்ணப்பம் முழுமையாக இருந்தால், நாங்கள் 30 வணிக நாட்களுக்குள் எங்கள் தீர்மானத்தைக் கொண்ட ஒரு கடிதத்தை உங்களுக்கு அனுப்புவோம். உங்கள் கோரிக்கையை நாங்கள் நிராகரித்தால், மேல்முறையீடு செய்வதற்கான அறிவுறுத்தல்கள் அந்தக் கடிதத்தில் இருக்கும்.

உங்கள் விண்ணப்பம் முழுமையற்றதாக இருந்தால், நாங்கள் உங்களைத் தொடர்புகொள்வோம். விடுபட்ட தகவல்களை வழங்க வேண்டிய ஒரு தேதியை நாங்கள் உங்களுக்கு வழங்குவோம். உங்கள் விண்ணப்பம் தொடர்ந்தும் முழுமையற்றதாக இருக்குமாயின், உங்களுக்கு நிதி உதவி கிடைக்காமல் போகலாம்.

**மேலும் தகவல்களை நான் எங்கே பெறலாம்?**
கூடுதல் தகவல்களை, MFA பாலிசியை மற்றும் விண்ணப்பத்தை நீங்கள் kp.org/mfa இல் பெறலாம். தகவல்கள் ஸ்கிரீன் ரீடர் அணுகக்கூடிய வடிவத்தில் பல மொழிகளில் கிடைக்கின்றன. நீங்கள் **1-844-412-0919** (TTY **711**) ஐயும் அழைக்கலாம்.

## ஏனைய நிதி உதவி

**சுகாதாரப் பராமரிப்புக்கு பணம் செலுத்துவதற்கு உதவி பெறுங்கள்**
உங்களிடம் சுகாதாரப் பராமரிப்புக் காப்பீடு இல்லை என்றால், Kaiser Permanente உதவலாம். உங்கள் விருப்பத்தேர்வுகள் பற்றி அறிய,

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை **1-800-479-5764** (TTY **711**) என்ற எண்ணை அழையுங்கள்.

**வாழ்க்கைச் செலவுகளுக்கான உதவிகளைப் பெறுதல்**
உணவு, வீடு, இணையம் அல்லது பிற பயன்பாடுகள் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்குப் பணம் செலுத்துவதற்கும், மேலும் பலவற்றுக்கும் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், kp.org/socialhealth ஐப் பார்வையிடவும். அல்லது சமூக ஆதரவு மையத்தை **1-800-443-6328** (TTY **711**), திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை அழைக்கவும்.

## MFA பாலிசி, விண்ணப்பம் மற்றும் திட்டத் தகவல்களின் நகல்களை எவ்வாறு பெறலாம்

**ஆன்லைன்**
kp.org/mfa

**தொலைபேசி**
**1-844-412-0919** (TTY **711**) அழைக்கவும்

## விண்ணப்பிப்பதற்கான வழிமுறைகள்

**ஆன்லைனில் விண்ணப்பித்தல்**
kp.org/mfa

**ஃபேக்ஸ் செய்தல்**
பூர்த்திசெய்யப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை 1-855-414-1713 என்ற எண்ணிற்கு ஃபேக்ஸ் செய்யுங்கள்

**அஞ்சலில் அனுப்புதல்**
பூர்த்திசெய்யப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை இந்த முகவரிக்கு அனுப்புங்கள்:
Kaiser Permanente
MFA Program
2101 East Jefferson Street
Rockville, MD 20852

**ஒப்படைத்தல்**
பூர்த்திசெய்யப்பட்ட உங்கள் விண்ணப்பத்தை எந்தவொரு Kaiser Permanente மருத்துவ மையத்திலும் உள்ள உறுப்பினர் சேவைகள் அலுவலகத்தில் நேரில் ஒப்படையுங்கள்.

©Kaiser Foundation Hospitals; Kaiser Foundation Health Plan of Mid-Atlantic States

# NOTICE OF LANGUAGE ASSISTANCE SERVICES

**English:** If you need help in your language, language assistance is available at no cost to you, 24 hours a day, 7 days a week (closed holidays). Call our Member Service Contact Center at 1-800-464-4000 (TTY 711) for help or visit any registration desk for more information at any Kaiser Permanente hospital, Monday through Friday, 8 a.m. to 5 p.m. Aids and services for people with disabilities, like documents in braille, large print, audio, and other accessible electronical formats are also available.

**Chinese:** 如果您需要使用您的语言获得帮助，我们每周 7 天、每天 24 小时免费提供语言帮助（节假日休息）。请致电 1-800-464-4000 (TTY 711) 联络我们的会员服务联络中心以寻求帮助，或前往任何 Kaiser Permanente 医院的登记台了解更多信息，我们的服务时间为周一至周五上午 8 点至下午 5 点。我们还为残疾人提供辅助工具和服务，例如盲文、大字体、音频和其他无障碍电子格式的文档。

**Spanish:** Si necesita ayuda en su idioma, contamos con asistencia de idiomas sin costo alguno para usted las 24 horas del día, los 7 días de la semana (excepto los días festivos). Comuníquese con nuestra Central de Llamadas de Servicio a los Miembros al 1-800-464-4000 (TTY 711) para obtener ayuda. O visite el mostrador de recepción en cualquier hospital de Kaiser Permanente para obtener más información, de lunes a viernes, de 8 a. m. a 5 p. m. También ofrecemos ayudas y servicios para personas con discapacidades, como documentos en braille, letra grande, audio y otros formatos electrónicos accesibles.



KAISER PERMANENTE®